# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (02.05.2015 முதல் 06.05.2015)

**அறிக்கை எண் 33/2015** **தேதி: 01.05.2015**

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழை காணப்பட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு ( 02.05.2015 முதல் 06.05.2015)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 38 முதல் 43 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02.05.15 | 1 | 35 | 24 | 5 | 64 | 43 | 8 | தென் மேற்கு |
| 03.05.15 | 1 | 35 | 24 | 5 | 64 | 43 | 8 | தென் மேற்கு |
| 04.05.15 | 1 | 36 | 25 | 5 | 64 | 38 | 8 | கிழக்கு |
| 05.05.15 | 0 | 36 | 25 | 3 | 64 | 38 | 8 | தென் மேற்கு |
| 06.05.15 | 0 | 36 | 25 | 3 | 64 | 38 | 8 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிரின் எடையை குறைக்க முன்பருவம் நடவு செய்த கரும்புக்கு தோகை உரிக்க வேண்டும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்து 5 மாதம் மற்றும் அதற்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ காலை மற்றும் மாலை நேரங்களில் காற்றின் ஈரப்பதம் 60 சதவீதத்திற்கு மேல் இருப்பதாலும் மேலும் இலோசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதாலும் கோடை கால இறவை பருத்தியில் சாம்பல் நோய் வரவாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய ஒரு எக்டருக்கு 250 கிராம் கார்பன்டசிம் கரைசலை தெளிக்கவும்.
- ✓ மல்லிகை மொட்டில் புழுக்களினால் ஏற்படும் சேதாரத்தினை கட்டுப்படுத்த புரபனோபாஸ் 50 ஈ.சி. மருந்தினை 1 மிலிக்கு 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

## குறுஞ்செய்தி

- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்து 5 மாதம் மற்றும் அதற்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**